செ.வெ.எண்:107 நாள்:22.02.2018

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் Combined Engineering Services Examination 24.02.2018 சனிக்கிழமை முற்பகல் மற்றும் பிற்பகல் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி மையத்தில் FX பாலிடெக்னிக் கல்லூரி, மேரி சார்ஜெண்ட் மேல்நிலைப்பள்ளி, சாப்டர் மேல்நிலைப்பள்ளி, கிறிஸ்துராஜா மேல்நிலைப்பள்ளி, ஜோஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மக்தலீன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பி.எஸ்.என் பொறியியல் கல்லூரி (Autonomous) ஆகிய ஏழு கல்வி நிலையங்களில் வைத்து நடைபெறவுள்ளது. இத்தேர்வினை 3104 நபர்கள் தேர்வு எழுதவுள்ளார்கள். தேர்வு மையங்களில் தேர்வினை வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நாளன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும், பேருந்துகளை தேர்வு மையத்திற்கு இயக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் கல்வி மையத்தில் காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தேர்வு எழுதுவோர் தேர்வு மையத்திற்கு முன்கூட்டியே உரிய நேரத்தில் தேர்வு எழுத ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், தேர்வு எழுதும் அறைக்குள் செல்போன்களை எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு எழுதுபவர்கள் தவிர இதர நபர்கள் தேர்வு நடைபெறும் வளாகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் இதன் மூலம் தெரிவிக்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி